# திருநெல்வேலி மாநகராட்சி

## 2020ம் ஆண்டு ஜனவரி மாதம் 30ம் நாள் வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு திருநெல்வேலி மாநகராட்சி வ.உ.சி. கட்டிடத்தில் வைத்து நடைபெற்ற மாமன்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்

1) திருநெல்வேலி மாநகராட்சியில் தற்போது சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் 169 வழக்குகள் நிலுவையாக உள்ளன. மேலும் தற்போது திருநெல்வேலி மாநகராட்சியில் கீழ்க்காணும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன.

| வ.எண் | திட்டத்தின் பெயர் | திட்டமதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | ஸ்மார்ட் சிட்டி திட்டப்பணிகள் | 990.34 |
| 2 | பாதாள சாக்கடை திட்டம் பகுதி 2 | 289.01 |
| 3 | பாதாள சாக்கடை திட்டம் பகுதி 3 | 440.19 |
| 4 | அரியநாயகிபுரம் குடிநீர் அபிவிருத்தி திட்டம் | 230.00 |
| | மொத்தம் | 1949.54 |

தற்போது நிலுவையாக உள்ள சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு வழக்குகள் திரு.ஆயிரம் கே.செல்வகுமார், பி.ஏ,பி.எல்., வழக்கறிஞரால் மட்டும் மாநகராட்சி சார்பாக வழக்காடப்பட்டு வருகிறது.

மேற்குறிப்பிட்டவாறு மத்திய / மாநில அரசு திட்டங்கள் ரூ.1949 கோடியில் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், எதிர்காலத்தில் மாநகராட்சிக்கு எதிராக தொடரப்படும் வழக்குகளை மாநகராட்சி சார்பாக உடனுக்குடன் எதிர்கொண்டு வழக்காட கூடுதலாக வழக்கறிஞர்கள் நியமனம் செய்ய வேண்டியது அவசியமாகிறது.

இதுதொடர்பாக கீழ்க்கண்ட இரண்டு வழக்கறிஞர்களிடமிருந்து விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | வழக்கறிஞர் பெயர்/முகவரி | பட்டப்படிப்பு விபரம் | மாநகராட்சி வழக்கறிஞராக பதவி வகித்த இதர மாநகராட்சி விபரம் பதவி வகைக்கு | வழக்கறிஞர் அனுபவம் | பார் கவுன்சில் பதிவு எண் |
|---|---|---|---|---|---|
| 1 | திரு.P.ஆதிமூலபாண்டியன்<br>4/323/1 நெல்லை தெரு<br>தாசில்தார் நகர்<br>அண்ணா நகர்<br>மதுரை 625 020<br>செல் 94438 55090 | எம்.ஏ.பி.எல் | 1.நாகர்கோவில் மாநகராட்சி<br>2.குளச்சல்<br>3.குழித்துறை<br>4.பத்மநாபபுரம்<br>5.தென்காசி நகராட்சிகள் | 18 வருடங்கள் | தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில் பதிவு எண் 1619/2001, நாள் 31.10.2001 |
| 2 | திரு.எஸ்.சதிஷ்<br>பரதா என்கிளேவ்<br>145/301 தம்புசெட்டி தெரு<br>சென்னை 600 001 | பி.ஏ.பி.எல் | சேலம் மாநகராட்சி | 1 வருடம் 10 மாதங்கள் | தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கைபேசி 90959 80976 | | | | பதிவு எண் MS.254/2018, நாள் 01.03.2018 |

மேற்படி இரு வழக்கறிஞர்களின் செயல்திறன் குறித்து சம்பந்தப்பட்ட நாகர்கோவில் மற்றும் சேலம் மாநகராட்சியில் கேட்டறிந்ததில் சிறப்பாக வழக்குளை கையாண்டு எதிர்வழக்காடி வருவதாக அறியப்பட்டது. மேலும் திரு.பி.ஆதிமூலபாண்டியன், வழக்கறிஞர் ஏற்கனவே திருநெல்வேலி மாநகராட்சி சார்பாக சில வழக்குகளில் திறம்பட செயல்பட்டு வருகிறார்.

எனவே அதிக எண்ணிக்கையில் வழக்குகள் நிலுவை உள்ளதாலும், மத்திய, மாநில அரசின் பல திட்டங்களை சட்டரீதியிலான தடைகள் ஏதுமின்றி செயல்படுத்திடவும், சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளைக்கு திருநெல்வேலி மாநகராட்சி சார்பாக வழக்குகளை ஏற்கனவே மாநகராட்சி வழக்கறிஞராக உள்ள திரு.ஆயிரம் கே.செல்வகுமார், பி.ஏ.,பி.எல்., போக கூடுதலாக திரு.பி.ஆதிமூலபாண்டியன், எம்.ஏ.பி.எல்., அவர்களையும் மாநகராட்சி வழக்கறிஞராக 01.02.2020 முதல் நியமிக்கவும், சென்னை உயர்நீதிமன்றம் சென்னையில் திருநெல்வேலி மாநகராட்சி சார்பான வழக்குகளை எதிர்வழக்காட திரு.எஸ்.சதிஷ், பி.ஏ.,பி.எல்., அவர்களை நியமிக்கவும் மாமன்றத்தின் பார்வைக்கும் மற்றும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு

1) பொருளில் காணும் விபரப்படி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் திருநெல்வேலி மாநகராட்சி சார்பான வழக்குகளுக்கு ஏற்கனவே மாநகராட்சி வழக்கறிஞராக உள்ள திரு.ஆயிரம் கே.செல்வகுமார், பி.ஏ., பி.எல்., வழக்கறிஞர் போக, கூடுதலாக திரு.P.ஆதிமூலபாண்டியன், எம்.ஏ.,பி.எல்., அவர்களை மாநகராட்சி வழக்கறிஞராக நியமித்தும், சென்னை உயர்நீதிமன்ற வழக்குகளுக்கு திரு.எஸ்.சதிஷ், பி.ஏ., பி.எல், அவர்களை மாநகராட்சி வழக்கறிஞராக நியமிக்கவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) மேற்படி புதிதாக நியமிக்கப்படும் வழக்கறிஞர்களின் பதவிக்காலம் 01.02.2020 முதல் மூன்று வருட காலத்திறிகு அனுமதித்து மாமன்றம் தீர்மானிக்கலாம்.

3) மேற்படி வழக்கறிஞர்களுக்கு அரசால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் வழக்கு கட்டணம் வழங்கிடவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 122

அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(சி1/3760/2018)